[18th March 1964

திரு. து. ப. அழகமுத்து : திரு காமராஜர் சுற்றுப்பிரயாணம் செய்யும் காலத்தில் இப்படி உயர்தர அதிகாரிகள் பந்தோபஸ்துக்குப் போனால் அவருடைய அந்தஸ்தை உயர்த்திக் காட்டுவது என்பதேயொழிய, வேறு விசேஷ சூழ்நிலை ஒன்றும் இல்லை என்பதுதான் நிலையா ?

MR. SPEAKER : It may be the opinion of the hon. Member.

திருப்புனவாசலுக்கு போலீஸ் நிலையம் (அறந்தாங்கி வட்டம்)

*310 கேள்வி.—**திரு. ஆ. துரையரசன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அறந்தாங்கி வட்டம் திருப்புனவாசல் கிராமத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் நிறுவ உத்தேசமுண்டா ?

(இ) அறந்தாங்கி போலீஸ் சர்க்கில் எல்லைக்குள் போலீசார்களுக்கு வீடு கட்டித்தரும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) ஆம்.

(*a*) No.

(*b*) Yes.

திரு. **ஆ. துரையரசன் :** இந்த திருப்புனவாசல் பகுதியில் ஏதாவது குற்றம் நடைபெற்றால் நீண்ட தூரத்திலுள்ள ஆவுடையார்கோவில் அல்லது மற்றொரு போலீஸ் ஸ்டேஷனுக்குத் தான் போகவேண்டியிருக்கிறது. திருப்புனவாசல் பகுதியில் ஒரு போலீஸ் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று 1963-ல் அபிவிருத்தி மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது அரசாங்கத்திற்குக் கிடைத்ததா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

சென்னை பல்கலைக் கழகச் சட்டம்

*311 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

சென்னை பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்தியமைக்கும் யோசனை எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter is under consideration.

திரு. இராம. அரங்கண்ணல் : நான் முன்பு ஒரு முறை இந்த மன்றத்தில் அதிகார சார்பற்ற மசோதா கொண்டுவந்த நேரத்தில், அமைச்சர் அவர்கள் 'கூடியவிரைவில் பல்கலைக்கழகத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டு சட்டமாக இயற்றப்படும்' என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லி கிட்டதட்ட $1\frac{1}{2}$ ஆண்டு காலமாகியும் இந்த மசோதா கொண்டுவரப் படவில்லை. எப்பொழுது இந்த மசோதா கொண்டுவரப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் 'கூடியவிரைவில்' என்று சொல்லவில்லை. ஆனால் நான் விளக்கியிருக்கிறேன். இப்பொழுது மதுரை பல்கலைக்கழகம் அமைப்பது பற்றி ஒரு குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. எப்பேர்பட்ட சட்டம், எப்படி அமைப்பது என்பதெல்லாம் முடிவுசெய்யப்